## காரியாபட்டி பகுதியில் மிளகாய் விளைச்சல் அதிகரிப்பு

First Published : 17 May 2010 09:01:34 AM IST

காரியாபட்டி, மே 16: காரியாபட்டி ஒன்றிய கிராமப் பகுதிகளில் கிணற்றுப் பாசனத்தில் மிளகாய் விளைச்சல் அமோகமாக உள்ளது. செடிகளில் பறித்த மிளகாய் பழத்தை உலர வைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

காரியாபட்டி ஒன்றியம் அழகியநல்லூர், மாந்தோப்பு, கல்குறிச்சி, பிசிண்டி, கெப்பிலிங்கம்பட்டி போன்ற கிராமங்களில் 500 ஏக்கர் பரப்பில் கிணற்றுப் பாசனத்தில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் நாற்றாங்கால் அமைத்து மிளகாய் விதைகளை விதைத்தனர். 40 நாள்கள் கழித்து நாற்றங்காலில் இருந்து மிளகாய்ச் செடிகளைப் பிடுங்கி, நிலங்களில் நடவு செய்தனர்.

சரியான நேரத்தில் உரம், பூச்சி மருந்து தெளித்ததால் மிளகாய் விளைச்சல் அமோகமாக உள்ளது. மிளகாய்ப் பழத்தைப் பறித்து உலர வைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஒரு செடியில் சுமார் 1 கிலோ வரை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து அழகியநல்லூரைச் சேர்ந்த விவசாயி அழகர்சாமி கூறுகையில், பருவ மழை இல்லாததால், கிணற்றுப் பாசனத்தில் மிளகாய்ச் செடிகளை நடவு செய்தோம். விதை, உரம், பூச்சி மருந்து என ஏக்கருக்கு ரூ. 7 ஆயிரம் வரை செலவாகியுள்ளது.

தற்போது மிளகாய்ப் பழம் பறிக்கும் பணி நடந்து வருகிறது. ஓர் ஏக்கருக்கு 5 குவிண்டால் வரை விளைச்சல் உள்ளது. 100 கிலோ உலர வைத்த வத்தல் ரூ. 4 ஆயிரம் முதல் ரூ. 5 ஆயிரம் வரை விற்பனையாகிறது. ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் முதல் ரூ. 18 ஆயிரம் வரை லாபம் கிடைத்துள்ளது என்றார்.

## சூறாவளிக் காற்று 5 ஏக்கர் பப்பாளித் தோட்டம் சேதம்!

First Published : 17 May 2010 07:48:17 AM IST

தருமபுரி, மே 16: தருமபுரியில் சனிக்கிழமை இரவு வீசிய சூறாவளிக் காற்றில் 5 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பப்பாளி மரங்கள் சாய்ந்தன.

மாவட்டத்தில் ஏப்ரல் இறுதி வாரத்திலும், மே மாதத்தின் முதல் வாரத்திலும் பரவலான மழை பெய்தது. சனிக்கிழமை இரவு பென்னாகரம் ஒன்றியத்தில் 45 மி.மீ. மழை பதிவானது.

தருமபுரி ஒன்றியத்தில் சூராவளிக் காற்று வீசியதால், அதியமான்கோட்டை, ராஜபேட்டை பகுதிகளில் தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

குண்டலப்பட்டியைச் சேர்ந்த கோபால் நிலத்தில் 5 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 90 சதவீத மரங்கள் சாய்ந்தன.

அவை 3 ஆண்டுகள் விளைச்சலைத் தரும் "ரெட்லேடி' வகையை சேர்ந்த பப்பாளி மரங்கள் ஆகும். இக்காய்கள் பெங்களூர், கேரளா மற்றும் ஒசூர் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன.

சேதமான மரங்களுக்கு வேளாண்மைத் துறை சார்பில் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என கோபால் கோரிக்கை விடுத்துள்ளார்.

**அணைகளில் குறையும் நீர்மட்டம்: கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுமா?**

First Published : 17 May 2010 07:59:20 AM IST

அம்பாசமுத்திரம், மே 16: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால் ஜூன் முதல் வாரத்தில் கார் பருவ சாகுபடி பணிகளை தொடங்க அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படுமா என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

தாமிரபரணி பாசனத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 2.55 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளில் நீரை சேமித்து வைத்து பாசனம், குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

தாமிரபரணி வடிநிலப் பாசனத்தில் கார், பிசானம் இரு பருவம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தென்மேற்கு பருவ மழைக் காலத்தில் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை சாகுபடி செய்யும் முறையை கார் சாகுபடி என்றும், வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் அக்டோபர் முதல் மார்ச் வரை சாகுபடி செய்யும் முறை பிசான பருவம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஏப்ரல், மே மாதங்களில் பாசனத்திற்கு அணைகளில் இருந்து தண்ணீர் வழங்கப்படுவதில்லை. ஆனால் அணைகளில் உள்ள நீர் இருப்பைப் பொருத்து ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு பகுதியில் பழந்தொழி எனும் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

இதன் மூலம் 8400 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும். இவ்வாண்டும் முன் கார் பருவ சாகுபடிக்கு கடந்த ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இது தவிர மணிமுத்தாறு அணையில் பெருங்கால் மதகு மூலம் பாசனம் பெறும் 2586 ஏக்கர் நிலங்களுக்கு மே மாதம் முதல் தேதியில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது கோடை வெப்பம் கடுமையாக இருப்பதாலும், முன் கார் பருவ சாகுபடிக்கு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாலும் திருநெல்வேலி மாவட்ட அணைகளின் நீர் இருப்பு வெகுவாக குறைந்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை (மே 16) அணைகளின் நீர்மட்டம் நிலவரம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 62.50 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 73.10 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 71.90 அடியாகவும் இருந்தது. அணைகளுக்கு நீர்வரத்து பெரிய அளவில் இல்லை. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 70 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 14 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையில் இருந்து 355 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து 500 கனஅடியும் தாமிரபரணி ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

இதனால் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. எனவே ஜூன் முதல் வாரத்தில் கார் பருவ சாகுபடி பணிகளை தொடங்க அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுமா என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

**கன்னடியன் கால்வாய் பாசனம் பாதிக்கும்?**

மழைக் காலங்களில் வீணாகும் நீரை சேமித்து வறட்சியான பகுதிகளுக்கு வழங்கும் வகையில் ரூ. 369 கோடியில் வெள்ளநீர் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத் திட்டத்திற்காக கன்னடியன் கால்வாயை அகலப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

3650 கனஅடி நீரை கடத்தும் வகையில் கால்வாயை அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் தீவிரமாக நடைபெற்றபோதிலும் ஜூன் மாதத்திற்குள் முழு அளவில் நிறைவு பெற வாய்ப்பில்லை என கருதப்படுகிறது.

அண்மையில் கால்வாய்ப் பணிகளை பார்வையிட்ட பொதுப்பணித் துறை முதன்மை செயலர் ராமசுந்தரம், ஜூன் 2 வது வாரத்தில் கார் பருவ பாசனத்திற்கு கால்வாயில் தண்ணீர் திறக்கப்படும் என்று தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் 12,500 ஏக்கர் பாசனம் பெறும் பெரிய கால்வாய் இக் கால்வாய். எனவே பாசனம் பாதிக்காத வகையில் தண்ணீர் திறந்து விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பவானிசாகர் அருகே சூறாவளிக் காற்று:ரூ.25 லட்சம் வாழைகள் நாசம்**

First Published : 16 May 2010 09:50:14 AM IST

சத்தியமங்கலம்,மே 15: பவானிசாகர் அடுத்துள்ள கிராமப் பகுதியில் வீசிய சூறாவளிக்காற்றால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட வாழைகள் சேதமடைந்தன. ÷பவானிசாகர் அடுத்துள்ள தாண்டாம்பாளையம்,உப்புப்பள்ளம், பாரதிநகர் கெஞ்சனூர், தயிர்ப்பள்ளம், கொத்தமங்கலம் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் செவ்வாழை,கதளி மற்றும் பூவன் வாழைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. ÷ இந்நிலையில், சனிக்கிழமை அப்பகுதியில் திடீரென வீசிய சூறாவளிக்காற்றால் குலைதள்ளிய நிலையில் இருந்த ஆயிரக்கணக்கான வாழைகள் நாசமடைந்தன. இதன் மதிப்பு ரூ.25 லட்சம் எனக் கணக்கிடப்படுகிறது. தாண்டாம்பாளையம் ராஜமாணிக்கம் என்பவரின் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த பட்டுவளர்ப்பு கூரை மற்றும் அங்கு சாகுபடி செய்யப்பட்ட 2000 வாழைகள் முற்றிலும் சேதமடைந்தன. ÷தயிர்ப்பள்ளத்தை குமார் என்பவரின் தோட்டத்தில் விற்பனைக்கு தயாராக குலைதள்ளிய நிலையில் இருந்த 1,500 பூவன் வாழைகள் நாசமடைந்ததால், தமிழக அரசிடம் நிவாரணம் கேட்டுள்ளார். ÷ பாதிக்கப்பட்ட வாழைத் தோட்டங்களையும், பாரதிநகரில் சேதமடைந்த கூரைவீடுகளை பவானிசாகர் எம்எல்ஏ., ஓ.சுப்பிரமணியம் சனிக்கிழமை பார்வையிட்டார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள்**

First Published : 17 May 2010 03:38:51 AM IST

திருக்கோவிலூர், மே 16: திருக்கோவிலூர் மற்றும் முகையூர் வட்டாரங்களில் கோடை பருவத்துக்கான விதைகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வீ.ஆறுமுகம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பின் விவரம்: விதைக்கிராம திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானிய விலையில் கம்பு, உளுந்து, ராகி மற்றும் மணிலா விதைகளும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானிய விலையில் ஜிப்சம் மற்றும் ஜிங்க் சல்பேட் விற்பனை செய்யப்படுகிறது.

÷தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் உளுந்து, ஜிப்சம், வேம்பு கலந்து பூச்சிக்கொல்லி மற்றும் கைத்தெளிப்பானும், ஐசோபாம் திட்டத்தின் கீழ் வேம்பு கலந்த பூச்சிக்கொல்லி மற்றும் கைத்தெளிப்பான், மணிலா விதைகள் விற்பனை செய்யப்படுகிறது.

÷ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கைத்தெளிப்பான் மற்றும் விசைத்தெளிப்பானும், எண்ணெய்ப்பனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானிய விலையில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த இனகவர்ச்சி பொறி மற்றும் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நெல் விதைகள் மானிய விற்பனை செய்யப்படுகிறது என செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இளைஞர் காங்கிரஸ் நேர்முகத் தேர்வு

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, ஆரணி ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கான மாஸ்டர் கோச் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷திருவண்ணாமலையில் நடைபெற்ற இந்த நேர்முகத் தேர்வுக்கு, சேலம் மண்டல பயிற்சியாளர் (பொறுப்பு) நடராஜ், தமிழ்நாடு மாஸ்டர் கோச் தேர்வாளர் பாபுஜி கௌடா ஆகியோர் தலைமை வகித்தனர்.

÷மாநில பொதுச் செயலாளர்கள் எஸ்.பிரபு, அமீர்ஜாகீர் அபாஸ் ஆகியோர் முன்னிலையில் 150 பேர் இத்தேர்வில் பங்கேற்றனர்.

**புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு மனிதச் சங்கிலி**

First Published : 17 May 2010 09:00:59 AM IST

ஸ்ரீவில்லிபுத்தூர், மே 16: விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு மனிதச் சங்கிலி நடைபெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர் டெஸ்ட் நிறுவனமும், தட்ப வெப்ப நீதிக்கான குழந்தைகள் இயக்கமும் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின.

நிலத்தடி நீரையும், நீர் ஆதாரங்களையும் பாதுகாக்க வேண்டும். துணிப் பைகளைப் பயன்படுத்த வேண்டும். மரம் வளர்க்க வேண்டும். காடுகள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும். வனங்களையும் இயற்கை வள ஆதாரங்களையும் பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் எழுதிய அட்டைகளைத் தாங்கி ஏராளமான மாணவ, மாணவியர் மனித சங்கிலியில் கலந்து கொண்டனர்.

மனித சங்கிலியை ஸ்ரீவில்லிபுத்தூர் நகரக் காவல்துறை ஆய்வாளர் முத்துக்குமார் தொடங்கி வைத்துப் பேசினார்.

நிகழ்ச்சியில் டெஸ்ட் நிறுவன திட்ட இயக்குநர் ஏ.ஜோசப்ராஜ், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்ட குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜானகி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தமிழகத்தில் தோட்டக்கலை பயிர்களின் பரப்பு உயர்வு : வேளாண் பல்கலை துணைவேந்தர் தகவல்**

கோவை : "தமிழகத்தில், கடந்த பத்தாண்டுகளில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 28.8 சதவீதமும், உற்பத்தி 65 சதவீதமும், உற்பத்திறன் 28 சதவீதம் உயர்ந்துள்ளது," என வேளாண்மை பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார். தோட்டக்கலையில் பயிர்கள் வருடாந்திர ஆராய்ச்சி கூட்டம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலையில் நடந்தது. துவக்கவிழாவில், தோட்டக்கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பல்கலை விஞ்ஞானிகள் 130 பேர் பங்கேற்றனர்.

வேளாண்மை பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி, விழாவை துவக்கி வைத்து பேசியதாவது: விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டில் தோட்டக்கலை துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, விவசாயிகள் சூழ்நிலைக்கேற்ப தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆலோசனைகள் வழங்க வேண்டும். அனைத்து வேளாண் துறைகளுக்குள் தோட்டக்கலைத் துறையே அதிவேக முன்னேற்றம் அடைந்து வருகிறது. தேசிய அளவில், 1991-92ல் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பரப்பளவு 12.8 மில்லியன் எக்டர் என்ற அளவில் இருந்து 2008-09ம் ஆண்டில் 20.7 மில்லியன் எக்டர் அளவு உயர்ந்துள்ளது.

இதேபோல், உற்பத்தியும் 96.6 மில்லியன் டன்களில் இருந்து 220 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை, கடந்த 10 ஆண்டுகளில் தோட்டக்கலை பயிர்களின் பரப்பு 28.8 சதவீதமும், உற்பத்தி 65 சதவீதமும், உற்பத்திறன் 28 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலை தோட்டக்கலைப் பயிர்களில் 90 ரகங்களை வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்ட ரகங்கள் விவசாயிகளிடம் சென்று சேர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தற்போது, தனியார் நிறுவனங்கள் காய்கறி, விதை விற்பனையில் முன்னிலையில் உள்ளன. இந்நிலையில்,

விஞ்ஞானிகள் சிறந்த குணாதிசயங்களை கொண்ட ரகங்களை கண்டுபிடிப்பது அவசியம். இவ்வாறு துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

பெங்களூரு, 'நம்தாரி' விதைகள் நிறுவன ஆராய்ச்சி இயக்குனர் ஆனந்த் பேசுகையில்," பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்கள், வறட்சி, வெப்பம், உப்புத்தன்மை ஆகியவற்றை தாங்கும் தன்மை கொண்ட தாவரங்களை உருவாக்கல் மற்றும் ஏற்றுமதி சந்தைக்கேற்ப ரகங்களை உருவாக்க வேண்டும். மேலும், குறைந்த இடுபொருள் பயன்பாட்டில் அதிக மகசூல் தரவல்ல ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரங்கங்களை உருவாக்க வேண்டும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்," என்றார்.

வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மைய இயக்குனர் அஜ்ஜன் பேசியதாவது: உலகளவில் பலவகையான பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. ஆனால், தோட்டக்கலை வர்த்தகத்தில் இரண்டு சதவீதமே பங்கு உள்ளது. மேலும், உற்பத்தி செய்யப்படும் பழம் மற்றும் காய்கறிகளில் இரண்டு சதவீதமே பதப்படுத்தப்படுகிறது; 30 முதல் 40 சதவீதம் வீணாக்கப்படுகிறது.

தோட்டக்கலை உயர் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு இல்லாமை, சிறு மற்றும் குறுகிய விவசாய நிலப்பரப்பு, தோட்டக்கலை பயிர்களுக்கான அடிப்படை விலை நிர்ணயம் இல்லாமை, ஏற்றுமதி சந்தை குறித்த விழிப்புணர்வு இல்லாமை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

இதனை நிவர்த்தி செய்ய, துல்லிய பண்ணை முறைகளை கடைபிடித்தல், ஏற்றுமதி சந்தை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பதப்படுத்தலுக்குகேற்ற பழங்கள் மற்றும் காய்கறி ரகங்களை உருவாக்குதல், விவசாயிகளிடையே விளைபொருள் சார்ந்த குழுக்களை உருவாக்கி, தொழில்சாலைகளுக்கு ஏற்ற விளைபொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் அறுவடைக்கு பின், உயர் தொழில்நுட்பங்களை உருவாக்குதல் போன்ற வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அஜ்ஜன் பேசினார்.

**மானிய விலையில் ஜிப்சம் உதவி இயக்குனர் தகவல்**

விருத்தாசலம் : தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய விலையில் ஜிப்சம் பெற்று விவசாயிகள் பயனடையலாம் என வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் அன்பழகன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விருத்தாசலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தற்போது ஜிப்சம் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் 50 சதவீத மானியத்தில் 50 கிலோ மூட்டை ரூபாய் 58.85க்கு பெற்று பயனடையலாம். அதுபோல் சிங்சல் பேட் 50 கிலோ மூட்டை ரூபாய் 864க்கு பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்..

**விவசாயிகள் கவனத்திற்கு**

பழநி:பழநி வேளாண்மை உதவி இயக்குனர்(பொறுப்பு) காளிமுத்து கூறியுள்ளதாவது: தென்னைக்கு காப் பீட்டு திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. நடவு செய்து 4 ஆண்டுகள் முதல் 60 வயது வரையான மரங்களுக்கு இயற்கை சீற்றத்தின் போது இழப்பீடு வழங்கப் படும். ஆண்டிற்கு ஒரு முறை பிரிமியம் செலுத்த வேண் டும். பிரிமியத்தில் 50 சதவீதம் தென்னை வளர்ச்சி வாரியமும், 25 சதவீதம் மாநில அரசும் வழங் கும். கூடுதல் விபரத்திற்கு வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்,'இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**வே.பாளையத்தில் அதிகரித்துள்ள மஞ்சள் மகசூல் கூலி தொழிலாளர் பற்றாக்குறையால் பாதிப்பு**

வேலாயுதம்பாளையம் : நொய்யல் சுற்றுப்பகுதிகளில் மஞ்சள் மகசூல் அதிகளவு செய்யப்படுகிறது. ஆனால், விவசாய கூலி தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கும் போக்குவரத்து செலவு காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

நொய்யல் சுற்றுப்பகுதியில் நொய்யல், மரவாபாளையம், கோம்புப்பாளையம், புங்கோடை, சேமங்கி, குளத்துப்பாளையம், நடையனூர் உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் ஊடுபயிராகவும், தனி விளைச்சலாகவும் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு மஞ்சள் கிழங்கு மற்றும் விரலி மஞ்சள் சாகுபடி அதிகளவில் செய்யப்படுகிறது. நன்கு வளர்ந்த மஞ்சள் கிழங்கினை தோட்டத்திலேயே பிடுங்கி எடுத்து வேகவைக்கும் பணி தற்போது நடக்கிறது. எந்த ஒரு மங்கள நிகழ்ச்சியிலும் மஞ்சளுக்கே முக்கியத்துவம் கொடுத்து வரும் தமிழகத்தில் மஞ்சள் விலை தற்போது கிடுகிடுவென தங்கத்துக்கு நிகராக உயர்ந்து வரும் நிலையில், கரூர் மாவட்டத்தில் வடமேற்கு காவிரி ஆற்று படுகையில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

இதுக்குறித்து விவசாயிகள் சுப்பிரமணி, அருணாச்சலம் கூறியதாவது: நொய்யல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தற்போது மஞ்சள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. நடவு பணியில் இருந்து மஞ்சள் கிழங்கு பிடுங்கி எரியூட்டி காயவைத்து விற்பனைக்கு அனுப்பும் பணி வரை ஏக்கர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்படுகிறது. மேலும், இப்பகுதியில் உள்ள தினக்கூலி விவசாய பணியாளர்கள் பலரும் தேசிய ஊரக நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணிக்கு சென்றுவிடுவதால், அருகில் உள்ள ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் இருந்து தினக்கூலி பணியாளர் கிழங்கு பிடுங்கும் வேலைக்கு அழைத்து வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு பஸ் கட்டணம் உட்பட கூடுதல் தொகையையும் வழங்க வேண்டிய நெருக்கடி உள்ளது. இப்பகுதி தினக்கூலி தொழிலாளர்கள் பலர் வேலையின்றி கிடைக்கும் வருவாயை கருதி ஊரக நூறு நாள் வேலைக்கு சென்று விடுகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் இழப்பீடு ஏற்படுகிறது.

இங்கு உற்பத்தி செய்யும் மஞ்சளுக்கு ஈரோடு மாவட்ட மஞ்சள் மண்டியில் நல்ல வரவேற்பு உள்ளது. நூறு கிலோவுக்கு 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலை நிர்ணயிக்கப்படுவது ஆறுதலாக உள்ளது. மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்தாலும், கூலி தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் மஞ்சள் கிழங்குகளை பிடுங்கி வேகவைத்து பின் உலர்த்தி வண்டியில் ஏற்றி செல்லும் போக்குவரத்து செலவுகள் அதிகம் உள்ளதால் விவசாயிக்கு கிடைக்க வேண்டிய கணிசமான வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர். கரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி, மஞ்சள் மண்டி அமைக்கவும், விவசாயிக்கு போதிய கடனுதவி வழங்கவும் அரசு நடவடிக்கைஎடுக்க விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். மேலும், பயிர் அறுவடை காலத்தில் ஊரக வேலைவாய்ப்பு பணியை நிறுத்திவைக்க பஞ்சாயத்து நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்கவும் எதிர்பார்ப்பு உள்ளது.

**பயிர் உற்பத்தி பெருக்க திட்டம் துவக்கம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நபார்டு வங்கி உதவியுடன் முதன்மை பயிர்களின் உற்பத்தி பெருக்க திட்டம் துவங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைகழக பையூர் மண்டல ஆராய்ச்சி மையம், நபார்டு வங்கி இணைந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதன்மை பயிர்களின் உற்பத்தி பெருக்க திட்ட துவக்க விழா பையூர் மண்டல ஆராய்ச்சி மைய வளாகத்தில் நடந்தது.

கலெக்டர் சண்முகம் தலைமை வகித்தார். மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் புத்தர் முன்னிலை வகித்தார். திட்டத்தை துவக்கி வைத்து கலெக்டர் சண்முகம் பேசியது: தமிழகத்தில் விவசாய நிலம் குறைந்து கொண்டே போகிறது.

ஆனால் உணவின் தேவை அதிகம் உள்ளது. இப்பிரச்னையை சமாளித்து உற்பத்தி திறனை பெருக்க அனுபவ பூர்வமாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நபார்டு வங்கி நிதி உதவியுடன் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம் முதன்மை பயிர்களின் உற்பத்தி திறன் பெருக்க திட்டத்தை துவக்கியுள்ளது. தமிழகத்தில் இந்த திட்டம் ஆறு மாவட்டங்களில் துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது ஐந்து கிராமங்களில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களின் திறன் அறிந்து தீட்டப்படும் பண்ணை வரைவினை ஒட்டி நீர் மற்றும் நில வளத்தினை பாதுகாத்து லாபத்தினை அதிகப்படுத்த வழிவகை செய்யும். கிருஷ்ணகிரி, சூளகிரி மற்றும் ஓசூர் தாலுகாவில் 25 உழவர் குழுக்களை உருவாக்கி அதனை ஒன்றாக இணைத்து 'கிராபாபெட்' என்னும் அமைப்பை ஏற்படுத்தி முறைபடி பதிவு செய்யப்படும்.

உழவர் குழு அமைப்பதே 'கிராபாபெட்டின்' முக்கிய நோக்கமாகும். வரும் ஆண்டுகளில் இந்த குழுக்களின் எண்ணிக்கை தேவைக்கேற்ப உயர்த்தப்படும். இந்த அமைப்பின் மூலம் விவசாயிகளின் உற்பத்திக்கும், வர்களின் விளை பொருள்களுக்கும்மதிப்பீடு அதிகரிக்கும்.

மத்திய, மாநில அரசுகளின் அனைத்து வேளாண் சார்ந்த திட்டங்களும் பயனாளிகளை சென்றடைய நபார்டு வங்கி மூலம் நிதியுதவி மற்றும் கடன் உதவி பெற்று இயந்திரமயமாக்கவும், விற்பனை கட்டமைப்பை மேம்படுத்தவும் வழிவகை செய்யும். பண்ணை கழிவுகள் மறுசுழற்சி, இடுபொருள் சிக்கனம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்றவை செயல்படுத்தப்பட்டு லாபத்தை பெருக்கும் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

உலக அரங்கில் நிகழும் வேளாண் தொழில் நுட்பங்களை அறியவும், விற்பனை வாய்ப்புகளையும், விலை நிலவரங்களை அறியவும் வேளாண் உறுப்பினர்களை பற்றி தகவல்களை விலை பொருள் தேவைப்படுவோரிடம் கொண்டு செல்லவும் அனைத்தும் கம்ப்யூட்டர் மயமாக்கப்படும்.

நன்னெறி வேளாண் தொழில் நுட்பங்கள் கடைபிடித்து சான்றளிப்பும் பெறப்படுவதால் உயரிய விலை கிடைக்கும் வாய்ப்புகளும் ஏற்படும். இந்த திட்டம் மூன்று ஆண்டுக்கு நடைமுறையில் இருக்கும்.எனவே விவசாயிகள் இந்த கூட்டமைப்பில் உறுப்பினர்களாக சேர்ந்து வ õய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

பையர் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் மணி, மாவட்ட வன அலுவலர் கணேசன், நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் நாராயன், பொது மேலாளர் ரமேஷ் டிங்கெல், துணை பொது மேலாளர் நித்யானந்தம், உதவி பொது மேலாளர் திருமலை, வேளாண் இணை இயக்குனர் ராஜன், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் தயாநிதி, பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் மணி உட்பட பலர் கலந்து கொண்டனர். விஜயபாஸ்கரன் நன்றி கூறினார்.

**மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெற ஊட்டமேற்றிய தொழுஉரம் அவசியம்**

---

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளத்தில் உயர் விளைச்சல் பெற ஊட்டமேற்றிய தொழு உரம் இட வேண்டுமமென விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை வழங்கியுள்ளது.இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் செந்தமிழ்செல்வன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளதாவது, கால்நடைகள் மூலம் கிடைக்கும் தொழுஉரத்தை விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும். தொழு உரத்தில் 0.5 சதம் தழைசத்தும், 0.2 சதம் மணிசத்தும், 0.5 சதம் சாம்பல் சத்தும் அடங்கியுள்ளது. மேலும் சிறு நீரில் அதிக சத்துக்கள் அடங்கியுள்ளது. எனவே வேளாண்மையில் சாகுபடி செலவுகளை குறைக்க தொன்று தொட்டு விவசாயிகள் பயன்படுத்தி வரும்தொழு உரத்தை நல்லமுறையில் ஊட்டமேற்றி சேமித்து வைத்து பயிருக்கு இடவேண்டும்.

ஊட்டமேற்றிய தொழு உரம் என்பது குறைந்த அளவு மக்கிய தொழு உரத்துடன் பயிருக்கு தேவையான மணிசத்து, சாம்பல்சத்து (சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ்) ஆகிய ராசாயன உரங்களை மட்டும் கலந்து ஒரு மாதம் பக்குவப்படுத்திய பிறகு இடும் உரமாகும். இதற்கு தேவையானது தொழு உரம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரமாகும். ஆடி பட்டத்தில் சாகுபடி செய்ய இருக்கும் மக்காசோளம் பயிருக்கு இப்போதே ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்கவேண்டும். இதற்கு ஒரு ஏக்கருக்கு தொழு உரம் 300கிலோ, சூப்பர் பாஸ்பேட் 75 கிலோ, பொட்டாஷ் 20 கிலோ தேவை. ஒரு ஏக்கருக்கு தேவையான 300 கிலோ தொழுஉரத்தைமூன்று சமபாகங்களாக பிரித்து கொள்ளவேண்டும். பிறகு சூப்பர் பாஸ்பேட் 75 கிலோ, பொட்டாஷ் 20 கிலோ உரத்தை இரண்டு சமபாகங்களாக பிரித்து கொள்ளவேண்டும். முதலில் ஒரு பங்கு தொழு உரத்தை நன்கு பரப்பிகொள்ளவேண்டும். பரப்பிய தொழு உரத்தின் மீது ஒரு பங்கு சூப்பர் பாஸ்பேட்டையும், ஒரு பங்கு பொட்டாஷ் உரத்தையும் சீராக பரப்பவேண்டும். இதன் மீது மற்றொரு பங்கு தொழு உரத்தை சீராக பரப்பவேண்டும்.இவ்வாறு பரப்பிய தொழு உரத்தின் மீது மீதமுள்ள ஒரு பங்கு சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களை பரப்பவேண்டும். பின் மீதமுள்ள ஒரு பங்கு தொழு உரத்தை சீராக பரப்பவேண்டும். இவ்வாறு பரப்பிய உரங்களை கலவை கலப்பது போல மண்வெட்டியால் நன்கு கலந்து கொள்ளவேண்டும்.

இதனை வயலின் மேடான பகுதியில் குவித்து மூடிவிடலாம். அல்லது குழியில் இட்டும் மூடிவிடலாம். அல்லது சாக்குகளில் கட்டி வைக்கலாம். இதனை அப்படியே ஒரு மாதம் வைத்திருக்கவேண்டும். பின்ன மக்காசோளம் விதைக்கும்போது யூரியா 20கிலோவை நன்கு கலந்து உழவுகாலில் இட்டபிறகு மக்காசோளம் ஊன்ற வேண்டும். உழவு காலில் இடுவதால் முளைத்து வரும் பயிர் நேரடியாக உரத்தை எடுத்துக்கொள்கிறது. இதன் மூலம் தொழு உரத்துடன் மணிசத்து உரங்களை கலந்து இடுவதால் மணிசத்து வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்கிறது. அதே போல் தொழு உரத்தில் உள்ள சத்தும் பயிருக்கு கிடைக்கிறது. குறைந்த அளவு தொழு உரத்தை வயலில் இட்டு மண்ணின் காற்றோட்டம், மண்ணில் நீர்சேமிக்கும் திறன், மண்ணிலுள்ள நுண்ணுயிரிகளின் செயல் அதிகரித்து பயிரில் வளர்ச்சி மற்றும் விளைச்சல் அதிகரிக்கலாம் . எனவே தொழு உரத்தின் தேவையை குறைப்பதற்கும் இட்ட மணி மற்றும் சாம்பல் சத்துடன் வீணாவதை தவிர்க்கவும், அதிக மகசூல் பெறவும் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்து பயன் அடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**மல்பெரி செடியில் மாவுப்பூச்சி தாக்குதல் பட்டு உற்பத்தியில் பாதிப்பு**

சேலம்: பட்டுப்புழுக்களின் உணவான மல்பெரி செடியில், பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலால், பட்டு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். சேலம் மாவட்டத்தில் 1,343 விவசாயிகள் 2,260 ஏக்கர்களில் மல்பெரி செடியை நடவு செய்து, பட்டுப்பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.
பட்டுப்பூச்சிகளை வளர்க்க முதல் பருவத்தில் 27 டிகிரி செல்சியஸ் வெப்பமும், 85 முதல் 90 சதவிகித ஈரப்பதமும் வேண்டும். ஐந்து பருவங்கள் வரை வளர்க்கப்படும் பட்டுப்பூச்சிகளுக்கு குறிப்பிட்ட அளவு வெப்பமும், ஈரப்பதமும்

வேண்டும். மல்பெரி இலைகளை மட்டுமே பட்டுப்பூச்சிகள் உணவாக உட்கொள்ளும். பட்டுப்பூச்சிகள் பொதுவாக 25 முதல் 30 நாட்களுக்குள் முழு வளர்ச்சியடையும்.

தற்போது கோடை வெயில் கொளுத்தி வருவதால், மல்பெரி செடிகளில் பப்பாளி மரத்தினை தாக்கக் கூடிய மாவுப்பூச்சிகள் தாக்கியுள்ளன. போதிய மழையின்றி வறட்சியாக உள்ளதாலும், மாவுப்பூச்சிகளின் தாக்கம் அதிகளவில் இருப்பதாலும், பட்டுப்பூச்சிகள் வளர்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
இது குறித்து ஈரோடு மாவட்டம் பவானியைச் சேர்ந்த விவசாயி நல்லசாமி கூறியதாவது:

பல ஆண்டுகளாக பட்டுப்பூச்சிகள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளேன். பட்டுப்புழுக்களின் 100 முட்டைகள் 600 ரூபாய்க்கு வாங்கி, மல்பெரி செடிகளை ஒரு ஏக்கரில் வளர்க்கிறேன். பட்டுப்பூச்சிகள் வளர்ப்பில் மிக கவனமாக ஈடுபட வேண்டியது உள்ளது. ஈ, எறும்புகள் மட்டும் பல்லாயிரக்கணக்கான முட்டைகளை அழித்துவிடும். மிக பாதுகாப்பான அறையில் வைத்து பட்டுப்புழுக்களை வளர்த்து வருகிறோம்.
மாவுப்பூச்சிகளின் தாக்குதலால் பட்டுப்புழுக்களின் உணவான மல்பெரி செடிகள் அழிந்து வருகின்றன.
மாவுப்பூச்சிகளை அழிக்க ரோக்கர், நுவான் போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளை ஒரு சில காலக்கட்டம் வரை தான் பயன்படுத்த முடியும். தொடர்ந்து பயன்படுத்தினால் பட்டுப்புழுக்கள் அழிந்துவிடும். 70 கிலோ பட்டுக்கூடுகள் கிடைக்க வேண்டும். ஆனால், மாவுப்பூச்சிகளின் தாக்குதல்களால் வெறும் 20 கிலோ பட்டுக்கூடுகள் தான் கிடைக்கிறது.
மழைக்காலத்தில் தான் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும். மாவுப்பூச்சிகளால் பாதிக்கப்பட்ட விவாயிகளுக்கு அரசு உதவி வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.
இது குறித்து பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் ராசமாணிக்கம் கூறியதாவது:
மாவுப்பூச்சிகள் தாக்கப்பட்ட மல்பெரி இலை உருமாறி சிறுத்து காணப்படும். இலையின் மேற்பரப்பில் கரும்பூஞ்சாணம் படர்ந்து காணப்படும். இது போன்ற அறிகுறிகள் காணப்பட்டால், ரோக்கர், நுவான், ப்ரோஃபனோபாஸ் போன்ற பூச்சிக் கொல்லி மருந்துகளை குறிப்பிட்ட கால அளவுகளில் பயன்படுத்தலாம்.
மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த தோட்டத்தில் களையின்றி வைத்துக் கொள்ள வேண்டும். மாவுப்பூச்சிகள் தாக்கப்பட்டுள்ள இலைகளை பாலிதீன் பைகளில் சேகரித்து எரித்து விட வேண்டும். மாவுப்பூச்சிகள் தாக்குதல் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ள சேலம் அணைமேட்டில் இயங்கி வரும் பட்டுவளர்ச்சித்துறை அதிகாரிகளை அணுகலாம்.

போதிய தண்ணீர் இன்றி வறட்சியாக காணப்படும் பகுதிகளில் மாவுப்பூச்சிகளின் தாக்குதல் அதிகளவில் இருக்கும். தோட்டத்தில் எந்நேரமும் குளிர்ச்சியாகவும், ஈரப்பதத்துடனும் வைத்திருக்க வேண்டும். இடைப்பாடி, இளம்பிள்ளை, ஆத்தூர், மேச்சேரி, பனமரத்துப்பட்டி, பூலாவரி, வீரபாண்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளில் பெரும்பாலானோர், மல்பெரி இலையை மாவுப்பூச்சிகள் தாக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளனர். 100 பட்டுப்பூச்சிகள் முட்டைகளில் இருந்து 60 கிலோ பட்டுக்கூடுகள் கிடைக்கும். விவசாயிகள் கவனமாக செயல்பட்டால் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் பெறலாம்.
பட்டுப்பூச்சிகள் வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசு உயர் விளைச்சல் தரும் மல்பெரி ரகம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,125 ரூபாயும், தனி புழு வளர்ப்பு மனை 1.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்(1,500 சதுர அடி பரப்புக்கு மேல்) வைத்தால் 75 ஆயிரம் ரூபாயும், தனி புழு வளர்ப்பு மனை ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்(1,000 சதுர அடி பரப்புக்கு மேல்) வைத்தால் 50 ஆயிரம் ரூபாயும், நவீன புழு வளர்ப்பு தாங்கி

அமைக்க (1,200 சதுர அடிக்கு மேல் 3 அடுக்குகளில் மட்டும்) 35 ஆயிரம் ரூபாயும், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கர் ஒன்றுக்கு(அதிகபட்சம் 2.50 ஏக்கர் வரை மட்டும்) 15 ஆயிரம் ரூபாயும் மான்யமாக வழங்கி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதல் தடுக்க விழிப்புணர்வு கருத்தரங்கம்**

ஆட்டையாம்பட்டி: சிமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி கழகம் கொங்கணாபுரம் கிளை சார்பில் தேசிய தொழில்நுட்ப தின விழா வீரபாண்டி யூனியன் பைரோஜி புதுப்பாளையத்தில் நடந்தது. பருத்தி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலை தடுக்கும் விழிப்புணர்வு கருத்தரங்கம், முன்னிலை செயல்விளக்கத்திடல், இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சிமா நிறுவனம் சார்பில் பார்த்திபன் வரவேற்றார். சேலம் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் தலைமை வகித்து, கூட்டுறவு கடன் சங்கம் மூலம் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்குதல் குறித்து பேசினார்.
சேலம் மாவட்ட மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் பாலசுப்ரமணியன், மண் பரிசோதனை, மண் வளம் பற்றி கருத்துக்களை எடுத்துரைத்து, விவசாயிகளுக்கு மண் வளப்பாதுகாப்பு அட்டைகளை வழங்கினார்.
சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் உதவி பேராசிரியர் கீதா, பருத்தி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதல், தடுக்கும் முறைகள், ராசாயன முறை, உயிரியல் முறையில் தாக்குதலை கண்காணித்து தடுப்பது பற்றி விளக்கினார்.
விழாவில் விதைச்சான்று அலுவலர் ரவி, உதவி இயக்குனர் கிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஏர்வாடி பகுதியில் சூறைக்காற்றுடன் மழை:ஒரு லட்சம் வாழைகள் சாய்ந்தன**

ஏர்வாடி:ஏர்வாடி மற்றும் திருக்குறுங்குடி பகுதியில் நேற்று பெய்த கனமழை மற்றும் சூறாவளி காற்றால் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாழைகள் முறிந்து சாய்ந்தது.ஏர்வாடி மற்றும் திருக்குறுங்குடி சுற்று கிராம பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கதலி, ரஸ்தாலி, பேயன், சக்கை, ஏத்தன், தொழுவன், கோழிக்கோடு, ரோபஸ்ட்ரா போன்ற ரக வாழத்தார்களை பயிர் செய்து வந்தனர். வாழவைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அதிக அக்கறையுடன் வாழையை பயிர் செய்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை 4 மணியளவில் பயங்கர சூறைக்காற்றுடன் மழை பெய்தது. இதனால் ஏர்வாடி, சிறுமளஞ்சி, டோனாவூர், கோதைசேரி, புலியூர்குறிச்சி, மாவடி, திருக்குறுங்குடி, கட்டளை உட்பட பல ஊர்களில் விவசாயிகள் பயிர் செய்து வந்த சுமார் ஒரு லட்சம் வாழைதார்கள் சூறாவளி காற்றில் முறிந்து சாய்ந்தது. மேலும் மரங்களும் ஆங்காங்கே காற்றில் சரிந்தது.மின்வயர்கள் மீது மரங்கள் சாய்ந்ததால் மின்வயர்கள் அறுந்து விழுந்ததால் ஏர்வாடி மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் மின்சாரம் தடைபட்டது. ஒரேநாளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்த சுமார் 1 லட்சம் வாழைகள் காற்றில் சாய்ந்ததால் அப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தனியார் கரும்பு சர்க்கரை ஆலைகளில் முறைகேடான எடை அளவீடு முறைகள்**

விழுப்புரம் : தனியார் கரும்பு சர்க்கரை ஆலைக ளில் எடை அளவீடுகளில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் தங்களின் கரும்பிற்கு விலை உயர்வு கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அரசியல் கட்சியினரும் தங்கள் வசதிக்கு ஏற்ப கரும்பு விலை உயர்வு கோரி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின் றனர். இருப்பினும் விவசாயிகள் அறு வடை செய்து ஆலைக்கு கொண்டு வரும் கரும்பை தனியார் சர்க்கரை ஆலைகள் சரியாக அளவீடு செய்து கொள்முதல் செய்வதில்லை என்று பரவலாக விவசாயிகள் தரப்பில் புகார் உள்ளது.

விவசாயிகள் தங்கள் அறுவடை செய்து லாரி மற்றும் டிராக்டர்களில் ஏற்றி வரும் கரும்பை வழியில் உள்ள ஏதேனும் ஒரு எலக்ட்ரானிக் எடை மிஷினில் வைத்து எடை போட்டு பார்த்து விட்டு ஆலைக்கு கொண்டு வந்தால், அந்த கரும்பை தனியார் ஆலைகள் உள்ளே அனுமதிப்பதில்லை. கரும்பை கொள்முதல் செய்யாமல் திருப்பி அனுப்புவதுடன், அந்த விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடாவும் சரியாக வழங்குவதில்லை என்று புகார்கள் எழுந்து வருகின்றன.

இதற்காக தனியார் கரும்பு ஆலை அதிபர்கள் அப்பகுதியிலுள்ள எலக்ட்ரானிக் எடை போடும் மெஷின் வைத்துள்ளவர்களிடம் கரும்பை எடை போடக்கூடாது என்ற மறைமுகமாக ஒப்பந்தம் செய்து கொள்வதாக விவசாயிகள் புலம்புகின்றனர். தனியார் ஆலைகளிலும் கரும்பு எடை போடுவதற்கு அரசு மூலம் எலக்ட்ரானிக் எடை மிஷின்கள் அமைத்து கவனிக் கவும், விவசாயிகள் தேவை ஏற்படும் போது வெளியில் எடைபோட்டு கொண்டு வரும் கரும்பை தனியார் அலைகள் தடையின்றி கொள்முதல் செய்யவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கரும்பு விவசாயிகள் சங்க கூட்டம்**

உளுந்தூர்பேட்டை : தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க கூட்டம் பெரிய செவலையில் நடந்தது.செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை சங்க பொருளாளர் சாரங்கபாணி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் அமலதாஸ் வரவேற்றார். மாநில துணைத்தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு செயலாளர் ராதாகிருஷ்ணன் பேசினர். செயலாளர் சீனுவாசன் அறிக்கை வாசித்தார். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கரும்புகளை காப்பாற்ற பாசண கிணறுகளை ஆழப்படுத்த அனைத்து வங்கிகள் மூலம் 5 ஆண்டுகால வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.

பெரியசெவலை கூட்டுறவு சர்க்கரை ஆலைக் குட்பட்ட எலவனாசூர் கோட்டை, எறையூர் பகுதிகளை தரணி சர்க்கரை ஆலைக்கு மாற்றியதை மீண்டும் பெரியசெவலைக்கு மாற்ற வேண்டும். செங்கல்வராயன் ஆலையில் நடந்துள்ள முறைகேடுகளை கண்டித்து ஜூன் 10ம் தேதி போராட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. கொடியான் நன்றி கூறினார்.

**உற்பத்தி குறைவு: அதிகரிக்காத விலை : கருப்பட்டி விவசாயிகள் ஏமாற்றம்**

ஸ்ரீவில்லிபுத்தூர்:மழையில்லாததால் குறைவான பதனீர் உற்பத்தியிலும், கருப்பட்டி விலை அதிகரிக்காததால் பனை விவசாயிகள் ஏமாற்றமடைந்து உள்ளனர்.ஸ்ரீவி., சுற்றுப்புற பகுதிகளான மங்காபுரம், திருவண்ணாமலை, தொட்டியப்பட்டி, வீரபாண்டி கருக்கு, அரளி தோப்பு பகுதிகளில் 50,000க்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன.கடந்தாண்டு சரி வர மழை பெய்யாததால் இந்தாண்டு தாமதமாகவே பதனீர் உற்பத்தி துவங்கியது. இருந்த போதிலும் போதியளவு பதனீர் உற்பத்தி இல்லை. மரங்களில் கிடைக்கும் குறைந்தளவு பதனீரை விவசாயிகள் பனை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்து விடுகின்றனர். சிலர் கருப்பட்டி உற்பத்தியும் செய்து வருகின்றனர். கிலோ கருப் பட்டியை 60 ரூபாய் வீதம் பனை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்கின்றனர்.கடந்தாண்டு சிக்-குன் குனியா பாதிப்பு அதிகளவில் இருந்தது. இதற்காக கசாயம் வைப்பதற்கு கருப்பட்டி தேவை அதிகமானது. அப்போது கிலோ 120 ரூபாய் வரை விற்பனையானது. இதை கணக்கிட்டு இந்தாண்டு கருப்பட்டிக்க அதிக விலை கிடைக்கும் என நினைத்திருந்த பனை விவசாயிகளுக்கு கிலோவிற்கு 60 ரூபாய் தான் கிடைப்பதால் ஏமாற்றமடைந்து உள்ளனர். மங்காபுரம் அய்யனார் கூறியதாவது: பனை மரம் ஏறுவதற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. மரம் ஏறுபவருக்கு அதிக கூலி கொடுக்க வேண்டியதுள்ளது. கடந்த அக்டோபர் வரை கிலோவிற்கு 100 ரூபாய் வரை கிடைத்தது. தற்போது குறைந்த விலை போவது ஏமாற்றமளிக்கிறது, என்றார்.

**சின்ன வெங்காயத்தை இருப்பு வைக்கும் விவசாயிகள்**

பல்லடம்:சின்ன வெங்காயம் கொள்முதல் விலை கட்டுப்படியாகாததால், விலை அதிகரிக்கும்போது விற்பனை செய்து கொள்ளலாம் என, பல்லடம் பகுதியில் உள்ள விவசாயிகள், நாட்டு ரக சின்ன வெங்காயத்தை படல் அமைத்து பட்டறை போட்டு பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.பல்லடம் பகுதியில் சுல்தான் பேட்டை, ஜல்லிப்பட்டி, குள்ளம் பாளையம், மானாசிபாளையம், கேத்தனூர், மந்திரிபாளையம், மானூர்பாளையம், குண்டடம், செஞ்சேரிமலை, செஞ்சேரிப்புத்தூர் உட்பட பல ஊர்களில் 6,000 ஏக்கர் பரப்பளவுக்கு சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டது.

ஒரு மாதத்துக்கு முன், அறுவடை நேரத்தில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் கொள் முதல் விலை 14 ரூபாயாக இருந்தது. தற்போது கொள்முதல் விலை சரிந்து ஒன்பது முதல் 10 ரூபாயாக உள்ளது. கிலோவுக்கு, ஐந்து ரூபாய் விலை சரிவு இப்பகுதி விவசாயிகளை கண்ணீர் விடச்செய்துள்ளது.இப்பகுதிகளில் இருந்து வழக்கமாக சின்ன வெங்காயம் விற்பனைக்குச் செல்லும் தூத்துக்குடி, திண்டுக்கல், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை போன்ற பகுதிகளில் ஆந்திரா, கர்நாடகா மாநிலத்தில் இருந்து வந்துள்ள சின்ன வெங்காயம் அதிக அளவு ஆக்கிரமித்துள்ளது.

தமிழகத்தில் பல இடங்களில் சின்ன வெங்காயம் இப்பருவத்தில் விளைச்சல் அதிகரிப்பு, வெளிமாநிலத்தில் இருந்து சின்ன வெங் காயம் வரத்து குவிவு, வெளிநாட்டுக்கு சின்ன வெங்காயம் ஏற்றுமதியின்மை ஆகிய காரணங்களால், சின்ன வெங்காயத்திற்கு போதிய கொள்முதல் விலை கிடைக்கவில்லை. இதன் காரணமாக, பல்லடம், சுல்தான்பேட்டை, குண்டடம் ஆகிய பகுதிகளில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் பலர், சாகுபடி செலவு, ஐந்து மாதம் உழைப்புக்கேற்ப உரிய கொள்முதல் கிடைக்காமல் கண்ணீரில் தவிக் கின்றனர்.

ஹைபிரட்' வெங்காயத்தை 15 நாட்களுக்கு மேல் இருப்பு வைக்க முடியாது என்பதால், அதை விவசாயிகள் இருப்பு வைக்காமல் விற்பனை செய்து வருகின்றனர்.வெளிமாநில வெங்காயம் வரத்து குறைந்தால், உள்ளூர் சின்ன வெங் காயம் விலை உயரும் என்ற நம்பிக் கையில், சுல்தான்பேட்டை, குண்ட டம், சின்னகாளிபாளையம், செஞ் சேரிமலை, செஞ்சேரிப்புத்தூர், கொடுவாய், சூரியநல்லூர், மானூர் பாளையம் உள்ளிட்ட பல இடங்களில் நாட்டுரக சின்ன வெங்காயம் சாகுபடி செய்து அறுவடை செய்துள்ள விவசாயிகள், நாட்டுரக சின்ன வெங்காயத்தை அறுவடை பூமியில் படல் அமைத்து, பட்டறை போட்டு பாதுகாத்து வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பாதுகாக்கப்படும் சின்ன வெங்காயம் மூன்று மாதம் வரை கெடாது. தேவைப்பட்டால், மூன்று மாதத்துக்கு பின், பட்டறை வெங் காயத்தை, விதை வெங்காயமாகவும்பயன்படுத்த முடியும் என்கின்றனர் விவசாயிகள்.

**பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதலை தடுப்பது எப்படி? தேசிய தொழில்நுட்ப தின விழாவில் அறிவுரை**

உடுமலை:பருத்தி சாகுபடியில் மாவுப்பூச்சி தாக்குதல் பரவாமல் தடுக்க, விளை நிலங்களை விவசாயிகள் தொடர்ந்து கண்காணித்து, நோய் தாக்கிய செடிகளை உடனடியாக அழிக்க வேண்டும்' என, தொழில்நுட்ப தின விழாவில் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.உடுமலை அருகே உள்ள கொழுமம் காவலப்பட்டியில் சீமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி கழகம் சார்பில் தேசிய தொழில் நுட்ப தினவிழா நடந்தது.

சீமா பொறுப்பு அலுவலர் ராமலிங்கம் வரவேற்றார்.விதை சான்று அலுவலர் ராமலிங்கம் பேசுகையில், "வேளாண் வளர்ச்சியில் விதை சான்று துறையின் பங்கு முக்கியமானது. தரமான விதை 60 சதவீத விளைச்சலை நிர்ணயம் செய்கிறது. விவசாயிகள் விதைப் பண்ணைக்கு தங்களது வயலை பதிவு செய்யும் போது, தரமான வயல்மட்ட பராமரிப்பு, நீர், உரம், பூச்சி நிர்வாகத்தை கடைபிடித்தால், தரமான நல்ல விதையை பிறருக்கு கொடுக்க முடியும்.

வேளாண் தொழில் வலுப்பெற தரமான விதை சான்று உள்ள விதையை பயன் படுத்துங் கள் ," என்றார்.இளநிலை மரபியலார் ஆஷாராணி பேசுகையில், "உடுமலை, பழனி பகுதிகளில் காணப்படும் மாவுப்பூச்சி தாக்குதலை

கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி சாகுபடியில் மாவுப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த பருத்தி வயல் பரப்புகள் மற்றும் அருகில் உள்ள களைகளை அகற்றி அழிக்க வேண்டும்.

விளைநிலங்களை நாள்தோறும் கண்காணித்து தாக்குதல் உள்ள செடிகளை பிடுங்கி, தீயிட்டு அழிக்க வேண்டும். தாக்குதல் தென்பட்டதும் 10 லிட்டர் தண்ணீரில் புரோபனோ பாஸ் 20 மில்லி கலந்து தெளிக்க வேண்டும். நிலத்திலும் மருந்துபடும்படி தெளிப்பதால், பூச்சிகள் விரைவாக பரவுவதை கட்டுப்படுத்த முடியும்," என்றார்.பழனி வேளாண் உதவி இயக்குனர் காளிமுத்து பேசுகையில், உணவு துறையில் ஏற்பட உள்ள பிரச்னைகளுக்கு துல்லிய பண்ணையம் மூலம் செம்மை நெல் சாகுபடி மூலம் புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி அதிக மகசூல் பெறலாம்," என்றார்.

எலி ஒலிப்பு, மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி குறித்து செயல்விளக்கம் அளிக்கப் பட்டது. கோடை பருவ பருத்தி சாகுபடியில் உள்ள சந்தேகங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

---

தினத் தந்தி

***சிறிய நீர்ப்பாசன திட்ட தொடக்க விழா கேரள நிதி மந்திரி தாமஸ் ஐசக் தொடங்கிவைத்தார்***

*பெரும்பாவூர், மே.17–*
*நீர்ப்பாசன திட்ட தொடக்கவிழாவை கேரள மாநில நிதி மந்திரி தாமஸ் ஐசக் தொடங்கிவைத்தார்.*
*நீர்ப்பாசன திட்ட தொடக்கவிழா*
*கேரள மாநிலம் கொச்சியில் நடந்த சிறிய நீர்ப்பாசன திட்ட தொடக்கவிழாவில் கேரள மாநில நிதி மந்திரி தாமஸ் ஐசக் கலந்துகொண்டு நீர்ப்பாசன திட்டத்தை குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிவைத்தார். விழாவுக்கு குடிநீர் வழங்கு துறை மந்திரி பிரேமச்சந்திரன் தலைமை தாங்கினார்.*
*விழாவில் சூப்பிரண்டு என்ஜினீயர் உண்ணிகிருஷ்ணன் திட்ட அறிக்கையை வாசித்தார். நிகழ்ச்சியில் நிதி மந்திரி தாமஸ் ஐசக் பேசியதாவது:–*
*இலவச சம்பளம்*
*பணம் இல்லை என்பதற்காக எந்த விசேஷ நலத்திட்டங்களையும் அரசு கைவிடுவதில்லை. சில தவிர்க்க முடியாத நலத்திட்டங்கள் மற்றும் பொது நலத்திட்டங்களுக்கு அரசு ஏதாவது ஒரு வகையில் நிதி வழங்கி விடுகிறது. வருமானத்துக்கு உட்பட்டு செலவுகளை கட்டுப்படுத்துவது என்ற நிலை தற்போது இல்லை.*
*அரசு வழங்கும் நலத்திட்டங்களை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. கூலி வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு பிரசவ கால ஒரு மாத சம்பளம் இலவசமாக வழங்க அரசு திட்டமிட்டு வருகிறது. இதுபோன்று பல திட்டங்களை அரசு நிறைவேற்ற ஆலோசித்து வருகிறது.*
*தொழிற்பூங்கா*
*அரசு வருமானத்தை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது 25 சதவீதம் அதிகம் கிடைத்துள்ளது. கருவூலத்தில் வருமானமும் அதிகரிக்கும்போது பல்வேறு திட்டங்களுக்கு அவைகள் செலவிடப்படும். அதற்கு அரசு முன்வந்து உள்ளது. பென்சன்தாரர்களுக்கு மட்டும் ரூ.2 ஆயிரம் கோடி வழங்க தேவைப்படுகிறது. இதில் ரூ.1000 கோடி மீண்டும் வைப்பு நிதியாக வைக்கப்படும் நிலை உள்ளது. புதிய தொழிற் பூங்கா தொடங்க பொது மக்கள், அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். மாறாக அரசு தன்னிச்சையாக எந்த முடிவையும் எடுக்காது.*
*இவ்வாறு மந்திரி தாமஸ் ஐசக் கூறினார்.*
*கேரள குடிநீர் வழங்கு துறை மந்திரி என்.கே.பிரேமச்சந்திரன் பேசுகையில் ரூ.105 கோடி செலவில் 418 நீர்ப்பாசன*

திட்டங்கள் புனர்நிர்மானம் செய்யப்பட உள்ளதாக தெரிவித்தார். எம்.எம்.யூசுப் எம்.எல்.ஏ., கே.பி.தனபாலன் எம்.எல்.ஏ., போக்குவரத்து துறை மந்திரி ஜோஸ்தெற்றயில், எம்.எல்.ஏ.க்கள் பாபுபோல், ஷாஜிபோல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**நேரு பூங்காவில் பூத்து குலுங்கும் ரோஜா பூக்கள் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி**



கோத்தகிரி நேருபூங்காவில் பல்வேறு வண்ணங்களில் பூத்து குலுங்கும் ரோஜா மலர்களை படத்தில் காணலாம்.

கோத்தகிரி, மே.17–

கோத்தகிரி நேரு பூங்காவில் ரோஜா பூக்கள் பூத்து குலுங்க தொடங்கி உள்ளது. இதனை சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் கண்டு ரசித்து செல்கின்றனர்.

3 ஏக்கர் பரப்பளவு

கோத்தகிரி காமராஜ் சதுக்கம் பகுதியில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் நேரு பூங்கா அமைந்துள்ளது. கடந்த 93–ம் ஆண்டில் இருந்து தோட்டக்கலை துறை பராமரிப்பின் கீழ் நேரு பூங்கா பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக காய் கறி கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. நேரு பூங்காவின் மைய பகுதியில் வட்ட வடிவில் ரோஜா மேடை அமைக்கப் பட்டு உள்ளது. ரோஜா தோட்டத்தில் சுமார் 100–க்கும் மேற்பட்ட வகையான ரோஜா செடிகள் பெங்களூரில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கு நடவு செய்யப்பட்டு உள்ளது.

சிகப்பு

இந்த பூங்காவில் உள்ள ரோஜா செடிகளில் ஆரஞ்ச், வெள்ளை, ரோஸ், சிவப்பு உள்பட பல்வேறு வண்ணங் களில் ரோஜாக்கள் பூத்து குலுங்குவது சுற்றுலா பயணி களிடையே மகிழ்ச்சியை ஏற் படுத்தி உள்ளது.

இது தவிர டயாந்தஸ், 12 வண்ணங்களில் மலரும் டேலியா மலர்கள், சால்வியா டார்ப், மேரி கோல்டு, பேன்சி டபுள், காலன் டூலா, டேலியா டார்ப், ஆஸ்டர், இன்கா மேரிகோல்டு, ஜினியா, ப்ளாக்ஸ், பிட்டோனியா உள்பட பல வண்ண மலர்கள் மலர்ந்துள் ளது.

காய்கறி கண்காட்சி

மே மாதம் கடைசி வாரத்தில் நேரு பூங்காவில் மூன்றாவது முறையாக காய்கறி கண்காட்சி நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மணி தலைமையில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.தற்போது கோத்தகிரியில் உள்ள நேரு பூங்கா, கோடநாடு காட்சிமுனை, கேத்தரின் நீர் வீழ்ச்சி ஆகிய சுற்றுலா தலங்களில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்ற னர்.

### மஞ்சூர் பகுதிகளில்

# வெள்ளை பூண்டு விவசாயத்திற்கு மாறி வரும் விவசாயிகள்

மஞ்சூர், மே.17–

மஞ்சூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் வெள்ளை பூண்டு பயிரிட அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

**தேயிலை**

நீலகிரி மாவட்டத்தில் முக்கிய முதுகெலும்பாக தேயிலை விவசாயம் உள்ளது. இதற்கடுத்து உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், கேரட், பீட்ரூட், பட்டாணி, பீன்ஸ் போன்ற காய்கறிகள் பயிரிடப் பட்டு ஏற்றுமதி செய்யப் பட்டு வருகிறது. இந்நிலையில் மஞ்சூர் சுற்று வட்டார பகுதிகளான எமரால்டு, கோத்தகண்டி, முத் தொரை பாலாடா, முள்ளிக் கொரை, மணியட்டி, மீக்கேரி, லாரன்ஸ், எடக்காடு, மற்றும் சுற்று வட்டார பகுதி களில் ஏராளமான விவசாயிகள் உள்ளனர். இவர்கள் கேரட், பீன்ஸ் போன்ற காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர்.

வெள்ளை பூண்டு

மஞ்சூர் பகுதியில் தற்போது வெள்ளை பூண்டு கடந்த 2 மாதங்களுக்கு முன் பயிரிடப் பட்டது. இந்த வெள்ளை பூண்டு இன்னும் சுமார் 2 மாதங்களில் அறுவடைக்கு தயாராகி விடும்.

தற்சமயம் ஒரு கிலோ வெள்ளை பூண்டு ரூ.150 வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இந்த வெள்ளை பூண்டுகள் விளைந்து அறு வடை செய்யும் நேரத்தில் இதே போன்று விலை கிடைத்தால் மேற்கண்ட விவசாயத்தில் ஈடுபடும் விவசாயி களுக்கு நல்ல லாபம் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது.

**செலவு அதிகரிப்பு**

இது குறித்து இப்பகுதியில் உள்ள விவசாயி ஒருவர் கூறியதாவது:–

மஞ்சூர் பகுதிகளில் உள்ள விவசாய தோட்டங்களில் பெரும்பாலான விவசாயிகள் கேரட், முட்டைகோஸ் போன்ற காய்கறி பொருட் களை பயிரிட்டுள்ளனர். தற்சமயம் நான் முதன் முறையாக வெள்ளை பூண்டு விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளேன்.

மஞ்சூர் பகுதிகளில் மழை பொய்த்ததால் வேறு வழியின்றி டீசல் மோட்டார் மூலம் தினசரி தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். இதனால் செலவினங்கள் அதிகரிக்கின் றன. மேலும் இதர பகுதிகளில் புதிய பயிரான வெள்ளை பூண்டு விவசாயத்தில் முதன் முறையாக ஈடுபட்டுள்ளதால் மிகவும் அச்சமாக உள் ளது. மேலும் பயிரிடப்பட்ட வெள்ளை பூண்டு பயிர்கள் நல்ல முறையில் செழித்து வளர்ந்துள்ளதால் மகசூல் அதிகரிப்பதுடன் அறுவடை நேரத்தில் குறைந்தபட்சம் ஒரு கிலோவிற்கு ரூ.150 வரை விலை கிடைத்தால் மட்டும் ஓரளவு கட்டுப்படியாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



மஞ்சூர் பகுதியில் ஒரு தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள வெள்ளை பூண்டு பயிரை படத்தில் காணலாம்.